# கண் விழிப்புணர்வுக் கண்காட்சி



மதுரை, அக்.9: மதுரை அரவிந்த் கண் மருத்துவமனையில், கண் விழிப்புணர்வுக் குறித்த நடைபெற்ற கண்காட்சியை (படம்) மாவட்ட ஆட்சியர் அன்சுல் மிஸ்ரா செவ்வாய்க்கிழமை தொடங்கி வைத்தார்.

உலகக் கண் பார்வை தினத்தை முன்னிட்டு 'கண்ணே நலமா 'விழிப்புணர்வுக் கண்காட்சி செவ்வாய்க்கிழமை தொடங்கி 3 நாள்கள் நடைபெறுகிறது. இதில் 20 க்கும் மேற்பட்ட அரங்குகள் உள்ளன. அரவிந்த் கண் மருத்துவமனையின் தலைவர் டாக்டர் நம்பெருமாள் சாமி கூறியது:

கண் அழுத்தம் 20 மி.மீ. க்கும் கூடுதலாக அதிகரிக்கும்போது 'கிளைகோமா' என்ற நோய் ஏற்படுகிறது. கண்ணில் சுரக்கும் நீர் வால்வு மூலம் வெளியேறுகிறது. அப்படி வெளியேறாத போது கண்ணில் அழுத்தம் அதிகரிக்கிறது. இதன்மூலம் பார்வை பறிபோனால் மறுபார்வை கிடைக்க வாய்ப்பில்லலை. நீரிழிவு நோய், நீர் அழுத்தம் உள்ளவர்கள் கண் மருத்துவர்களை அணுகி சிகிச்சை பெற வேண்டும் என்றார்.

கண்காட்சியைப் பார்வையிட மாணவர்கள் காலை 9 முதல் 4 மணி வரையும், பொதுமக்கள் மாலை 4 மணி முதல் இரவு 7 மணி வரையும் அனுமதிக்கப்படுவர்.